Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 418/2024

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம .சா. | - | 1 | தொழில் | - | |
| பெயர். | - | அய்யப்பன் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | அன்பழகன் | சமயம் | - | |
| கிராமம் | - | அரசூர் | வயது | - | |

30.09.2025

எதிரி ஆஜர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. நான் அரசூரில் வசித்து பி.இ. படித்துள்ளேன், கணினி மென்பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2014-2018-ல் பி.இ. படிப்பை முடித்து, ஓட்டுநராக வேலை செய்து போட்டித் தேர்விற்கு தயாராகி கொண்டிருந்தேன், 2022 ஜனவரி காலகட்டத்தில் கணினி மென்பொறியாளராக சென்னையில் வேலை செய்து வருகிறேன்.

2. எனக்கும், எதிரிக்கும் எப்படி பழக்கம் ஏற்பட்டது என்றால் நானும், எதிரியும் 2016 லிருந்து பஸ்ஸில் பயணம் செய்த வகையில் பழக்கம். பஸ்ஸில் பயணம் செய்யும் போது அவர் என்னிடம் அவரது குடும்ப சூழ்நிலையை சொல்லி விவரிப்பார், மோட்டிவேடாக பேசுவார், அந்த வகையில் பழக்கம்.

3. அவர் என்னிடம் பழகிய போது எங்கு வேலை செய்ததாக என்னிடம் சொன்னார் என்றால் எங்கும் வேலை செய்ததாக சொல்லவில்லை. 2019 காலகட்டத்தில் எதிரி அமேசானில் பொருட்கள் டெலிவரி செக்ஷனில் டீம் லீடராகவும், நான் அங்கு டெலிவரி ஓட்டுநராகவும், பாயாகவும் வேலை செய்தேன் என்றால் சரிதான்.இந்த விவரத்தை என்னுடைய புகாரிலோ, பிரமாண பத்திரத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இல்லை. என்னை விசாரித்த போதும் எதிரியுடன் பஸ்ஸில் பழக்கம் என்று சொன்னேனே தவிர அமேசானில்

பழக்கம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான், நீங்கள் முதலில் என்று கேட்டதால் அவ்வாறு சொன்னேன்.

4.அமேசானில் நான் செய்த வேலைக்கு எப்படி எனக்கு தொகை வந்தது என்றால் அமேசானிலிருந்து தொகை நேரடியாக வராது, எதிரி மூலமாக நேரடியாக கையிலும், அக்கவுண்டிலும் போடுவார். எனக்கு எந்த எந்த வங்கியில் கணக்கு இருந்தது என்றால் ஆக்ஸிஸ் பேங்க், பாங்க் ஆப் பரோடா, கரூர் வைஸ்யா பேங்க், இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் ஆகிய வங்கிகளில் இருந்தது.

5. நான் அமேசானில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளராக அந்த சமயத்தில் இருந்தேனா என்றால் இல்லை, வேலைக்கு ஏற்ப கூப்பிட்டு அதற்கேற்ப தொகை கொடுப்பார்கள். அமேசானிலிருந்து எனக்கு நேரடியாக தொகை எதாவது வங்கி கணக்கில் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, எதிரி தான் கொடுப்பார்.

6. எங்கு உள்ள அமேசான் கிளையில் வேலை செய்தேன் என்றால் வியாசர்பாடியில் உள்ள ஒரு குடோனில் உள்ள பொருட்களை எதிரி கூப்பிட்டால் டாடா ஏசியில் சென்று பொருட்களை எடுத்து டெலிவரி செய்ய செல்வேன். எதிரி தேவைக்கேற்ப கேட்டுக்கொண்டால் இன்னும் சில டாடா ஏசி வண்டிகளை அனுப்புவேன். வியாசர்பாடி அமேசான் குடோனிற்கு யார் பொறுப்பாளர் என்றால் அது எனக்கு தெரியாது, எதிரி தான் என்னை கூப்பிடுவார். அவர் தான் அங்கு டீம் லீடராக இருந்தார்.

7. வியாசர்பாடியில் எதிரியின் கீழ் வேலை செய்தேன் என்பதை காண்பிக்க எதாவது ஆவணம் வைத்துள்ளேனா என்றால் நான் ஓட்டியது தற்காலிக அடிப்படையில். எவ்வளவு நாள் எதிரியின் கீழ் அவ்வாறு வேலை செய்தேன் என்றால் 2018-2021 வரை வேலை பார்த்தேன். இந்த காலகட்டத்தில் அமேசானிலிருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கு நேரடியாக எந்த தொகையும் போடப்படவில்லை என்றால் இல்லை.

8. எதிரியுடைய வங்கி கணக்கிலிருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கு தொகை வந்துள்ளதாக என்றால் நியாபகம் இல்லை என்று சாட்சி சொல்லிவிட்டு, எதிரி சில தொகைகளை கையில் கொடுத்துள்ளார், சில தொகைகளை வங்கி கணக்கிலும் போட்டுள்ளார். ஆக்ஸிஸ் பேங்க், பாங்க் ஆப் பரோடா, கரூர் வைஸ்யா பேங்க், இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் ஆகிய வங்கி கணக்குகளை ஆய்வு செய்தால் எதிரியின் வங்கி கணக்கிலிருந்து அல்லது அமேசானிலிருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கு எவ்வளவு தொகை வந்துள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், ஆக்ஸிஸ் பேங்க், கரூர் வைஸ்யா பேங்க், இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் ஆகிய வங்கி கணக்குகளை 2 வருடங்களுக்கு முன்பு முடித்துவிட்டேன்.

9. இந்த வழக்கில் புகாரே எதிரி என்னிடமிருந்து ரூ.2,50,000/- கடனாக வாங்கியதற்காக தான் போட்டுள்ளேன் என்றால் ஆமாம். 2018 லிருந்து என்னுடைய ஆண்டு வருமானம்

எவ்வளவு இருந்தது என்றால் மாதத்திற்கு ரூ.35,000-40,000/- இருக்கும். அந்த காலகட்டத்தில் நான் வருமான வரி கட்டினேனா என்றால் இல்லை, தற்காலிக வேலை தான் செய்து வந்தேன்.

10.எதிரி என்னிடம் ரூ.2,50,000/- எதற்காக கடன் வாங்கினார் என்றால் அவருடைய மகனுக்கு ஆப்ரேசன் பண்ண வேண்டும் என்பதற்காக கேட்டார், நான் அந்த சமயத்தில் வீடு கட்டலாம் என இருந்திருந்தேன்.ஒருவரிடமிருந்து பணத்தை கடனாக வாங்க வேண்டுமென்றால் அதற்காக பாண்டு பத்திரமோ, சொத்தை அடமானமோ போடுவார்கள் என்றால் சரிதான்.

11. நான் எதிரியிடம் பணத்தை கடனாக கொடுத்தற்காக எந்த ஆவணத்தையும் எழுதி வாங்கவில்லை என்றால் இல்லை, ஒரு மாதத்தில் கொடுத்துவிடுவதாக சொன்னதால் நான் வாங்கவில்லை. ஒரு மாதத்தில் கொடுத்துவிடுவதாக எதிரி சொன்னதாக சொல்கிறேனே இந்த விவரத்தை என்னுடைய புகாரிலோ, பிரமாண பத்திரிக்கையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, அதற்கு அப்புறம் செக்காக கொடுத்துவிட்டார்.

12. 20.02.2019 ல் பணம் கொடுத்ததற்கு 20.03.2019 ல் நானாக காசோலையை கேட்டேனா, அவராக கொடுத்தாரா என்றால் போனில் கேட்டேன், அவர் கொடுத்தார். நான் பணம் கொடுக்கும் போதே நான் இந்த தேதிக்குள் பணத்தை கொடுத்துவிடுகிறேன், இல்லையென்றால் செக் கொடுத்துவிடுகிறேன். செக்கே ஒரு ஆதாரம் தான் என்று சொன்னார்.

13. எதிரி பணத்தை எங்கு வந்து வாங்கினார், செக்கை எங்கு வந்து கொடுத்தார் என்றால் பணம் வாங்கியதும், கொடுத்ததும் அரசூரில் உள்ள எங்கள் வீட்டில் தான். எனது புகாரில் பணம் எங்கு கொடுத்தேன் என்றோ, செக்கை எங்கு கொடுத்தார் என்றோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது அட்வகேட்டை தான் கேட்க வேண்டும், அவர் தான் தாக்கல் செய்தார்.

14. நான் எதிரியிடம் அவரது மகனின் சிகிச்சை செலவிற்காக பணம் கொடுத்தாக சொல்கிறேனே அப்போது அவரது மகனுக்கு என்ன வயதிருக்கும் என்றால் 2-3 வயதிருக்கும். எதிரியின் மகனின் அறுவை சிகிச்சைக்காக பணம் வாங்கியதாக சொல்கிறேனே, அறுவை சிகிச்சை செய்த போது மருத்துவமனை சென்று பார்த்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எதிரியின் மகனுக்கு எந்த அறுவை சிகிச்சையும் நடைபெறவில்லை என்றாலும், எனக்கு பணம் கொடுப்பதற்கு வசதி இல்லை என்றாலும், எதிரிக்கு பணம் வாங்க வேண்டிய தேவை இல்லை என்றாலும், எதிரி என் வீட்டிற்கு வந்து எந்தவித தொகையும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. ரூ.2,50,000/- என்பது ஒரு பெரிய தொகை என்பதால் அந்த தொகையை எந்தவித ஆவணமும் பெறாமல் கைமாற்று கடனாக

ஒரு மாதத்தில் தந்துவிடுவதாக சொல்வது நம்பத்தகுந்ததாக இல்லையென்றால் நான் தொகையை கொடுத்தேன்.

15. செக்கை கொடுக்கும் போதே எல்லாவற்றையும் பூர்த்தி செய்து தான் என்னுடைய கையில் கொடுத்தார் என்றால் ஆமாம். சாட்சியிடம் ம.சா.ஆ.1-ஐ காண்பித்து அதில் உள்ள தேதியும், தொகையும் வேறுவேறு பேனாவால் எழுதப்பட்டுள்ளது, அதில் நெம்பர்களின் வடிவம் வேறு வேறாக உள்ளது என்றால் இருக்கிறது. அதே செக்கில் அய்யப்பன் என்று உள்ளதை நான் எழுதினேனா என்றால் இல்லை. செக்கில் அய்யப்பன் என்ற எழுத்தும், தொகையும் வேறு வேறு பேனாவில் எழுதப்பட்டும், அதில் நெம்பர்கள் மற்றும் எழுத்தின் வடிவம் வேறு வேறாக உள்ளது என்றால் ஆமாம்.

16. ம.சா.ஆ.1-ல் அய்யப்பன் என்ற பெயர் வேறு மையிலும், மற்ற விவரங்கள் வேறு மையிலும் எழுதப்பட்டுள்ளது என்பதை குறித்து எதிரியிடம் எதாவது கேட்டேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.1ல் வேறு வேறு மையினால் எழுதப்பட்டது குறித்து என்னுடைய புகாரிலோ, பிரமாண பத்திரிக்கையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

17. செக்கை 20.03.2019 ல் கொடுத்துள்ள நிலையில் அதை வசூலுக்காக 3 மாதம் நெருக்கத்தில் 06.06.2019 ல் தான் வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம், செக்கின் காலகெடு 3 மாதம் என்று சொல்லியிருந்தார்கள், நான் வக்கீலிடம் போய் கேட்டேன், நான் எதிரியிடம் போய் செக்கை போடலாமா என்று கேட்டதற்கு அவர் இன்றைக்கு, நாளைக்கு என்று இழுத்துக்கொண்டே சென்றார், நான் சொல்லும் போது செக்கை போடு என்று சொன்னார்.

18. நான் தாக்கல் செய்துள்ள புகாரில் எதிரி நான் சொல்லும் போது செக்கை போடு என்று சொன்னதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, அவர் சொன்னார். 06.06.2019 ல் வங்கியில் தாக்கல் செய்வதை காண்பிக்க வங்கியின் வைப்பீட்டு ரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், காசோலையிலேயே அந்த விவரம் உள்ளது.

19. ம.சா.ஆ.1 ல் எந்த வங்கியின் சீல், எந்த தேதியில் உள்ளது என்றால் 07.06.2019 பாங்க் ஆப் பரோடா, புதுச்சேரி என்று உள்ளது. ஆனால் என்னுடைய புகாரிலும், பிரமாண பத்திரிக்கையிலும் 06.06.2019 அரசூர் கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேனா என்றால் அரசூர் கிளையின் வங்கியில் கொடுத்தேன். செக் ரிடர்ன் ஆனதை எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் 07 ந் தேதி போய் வங்கியில் விசாரித்தேன், விசாரிக்கும் போது அவர்கள் சொன்னார்கள்.

20. என்னுடைய புகாரிலோ, பிரமாண பத்திரிக்கையிலோ காசோலை திருப்பப்பட்ட விவரத்தை வங்கியில் சென்று தெரிந்து கொண்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். வங்கியில் சென்று நான் கேட்டவுடன் ம.சா.ஆ.2-ஐ எனக்கு கொடுத்துவிட்டார்களா

என்றால் ஆமாம். எந்த வங்கியில் கேட்டு வாங்கினேன் என்றால் பேங்க் ஆப் பரோடா, அரசூர் வங்கி கிளையில் கேட்டு வாங்கினேன்.

21. ம.சா.ஆ.2 ல் From ஆக்ஸிஸ் பேங்க் டூ பாங்க் ஆப் பரோடா என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது, எந்த பாங்க் ஆப் பரோடா கிளை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது வங்கியில் போட்டுள்ளார்கள், அதுப்பற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.2-ஐ பெற்ற பிறகு நேரடியாகவோ, தொலைபேசியிலோ காசோலை திருப்பப்பட்ட விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை, நோட்டீஸ் மட்டும் அனுப்பினேன்

22. ம.சா.ஆ.3-ஐ எப்போது அனுப்பினேனா என்றால் 05.07.2019 ல் அனுப்பினேன். அந்த நோட்டீஸ் அவருக்கு சார்வு செய்யப்பட்டதா என்றால் 20 ந் தேதிக்கே அவருக்கு போய் உள்ளது, அவர் வாங்க மறுத்துவிட்டதாக ரிடர்ன் ஆகிவிட்டது. இந்த விவரத்தை புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

23. புகாரை அதன் பிறகு எவ்வளவு நாள் கழித்து தாக்கல் செய்தேன் என்றால் அதிலிருந்து ஒரு மாத இடைவெளிக்குள் தாக்கல் செய்தேன், சரியாக தேதி தெரியவில்லை. செக் கொடுத்த காலத்திலிருந்து எதிரியை பார்த்து எதாவது பஞ்சாயத்து செய்தேனா என்றால் இல்லை. அதே அமேசான் கம்பெனியில் வியாசர்பாடி கிளையில் எதிரி வேலையை விட்டு நின்ற பிறகும், நான் அங்கு வேலை செய்தேனா என்றால் இல்லை. அமேசான் வியாசர்பாடி கிளையில் எத்தனை வென்டார்கள் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, எதிரியினுடைய வென்டார் (மேல் அதிகாரி) யார் என்று தெரியுமா என்றால் தெரியாது, இவர் வருவார், போவார்.

24.ஆக்ஸிஸ் பேங்க், பாங்க் ஆப் பரோடா, கரூர் வைஸ்யா பேங்க், இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் ஆகிய வங்கி கணக்குகளை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்து விளக்கம் அளிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் பார்க்கலாம். அந்த வங்கி விவரங்களை பார்த்தால் எனக்கு தொகை நேரடியாக கொடுக்கப்பட்டதா, வங்கி கணக்கிலிருந்து வந்ததா என்ற விவரம் தெரியும் என்றால் ஆமாம்.

25. நான் எதிரியின் கீழ் வேலை செய்த காலத்தில் எதிரி கையெழுத்து போட்டு தொகையை மட்டும் எழுத்தால் எழுதி என்னால் எழுதப்படாமல் இருந்த ஒரு காசோலையும், கையெழுத்து மட்டும் போட்டிருந்த மற்றொரு காசோலையும் நான் திருடிச்சென்று அதில் ஒரு காசோலையை இந்த வழக்கில் போட்டுள்ளேன் என்றால் இல்லை.

26. இரண்டு செக் காணாமல் போனது குறித்து எதிரி அவருடைய வங்கியில் சென்று ரிபோர்ட் செய்துள்ளார் என்றும், அவ்வாறு ரிப்போர்ட் செய்யப்போகிறார் என்று தெரிந்து ஒரு செக்கை பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ரகு என்பவர் எனக்கு அண்ணன் மாதிரி. நான் சென்னையில் தங்கியருந்த போது எங்கு

தங்கியிருந்தேன் என்றால் வண்டியிலேயே படுத்துப்பேன், அக்கா வீட்டிற்கு போக மாட்டேன்.

27. நானும், எதிரியும் அமேசான் வியாசர்பாடி கிளையில் ஒன்றாக பணிபுரிந்த போது எனக்கு சேர வேண்டிய 80,000/- ரகு என்பவர் மூலமாக பஞ்சாயத்து செய்து பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை, அவர் வரவே இல்லை, அவரை வைத்து பஞ்சாயத்து செய்தது கிடையவே கிடையாது. எனக்கும், எதிரிக்கும் கைமாற்று பரிவர்த்தனைகள் கிடையவே கிடையாது என்றாலும், எதிரிக்கு என்னிடமிருந்து தொகையை பெற வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல, 3 வருடமாக பணத்தை தருகிறேன் என்று இழுத்து வந்தார்.

28. எனக்கும், எதிரிக்கும் இடையே ரூ.80,000/- இருந்த கணக்கு வழக்கு பிரச்சனையில் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் காசோலையை பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வைத்துள்ள டாடா ஏ.சி யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது.

29.அமேசான் வியாசர்பாடி கிளையில் வேலை செய்ததற்காக டாடா ஏசி பாடியின் அளவை மாற்றினேனா என்றால் ஆமாம், மூடிய நிலையை மாற்றினேன், இப்போது எடுத்துவிட்டேன், அமேசான் கிளையில் வேலை செய்தவதற்காக மாற்றவில்லை, அதற்கு முன்பே மாற்றிவிட்டேன். எனக்கு சேர வேண்டிய தொகை 80 ஆயிரம் ரூபாய் என்று எதிரி கணக்கு பார்த்ததை ஒப்புக்கொள்ளாமல் நான் அந்த காலகட்டத்தில் வேறு நிறுவனத்தில் பணிபுரிந்திருந்தால் நிறைய சம்பாதித்திருப்பேன் என்பதாலும், வண்டியை மாற்றம் செய்தததில் எனக்கு நஷ்டம் ஏற்பட்டதாலும், எதிரியிடம் அதிக தொகை கேட்டு தகராறு செய்ததற்காகவும், அதற்காக காசோலையை பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

30. நான் எதிரிக்கு ரூ.2,50,000/- கடன் கொடுக்கவில்லை என்றாலும், அதை திருப்பி கொடுக்க எதிரி எனக்கு காசோலை அளிக்கவில்லை என்றாலும், இந்த வழக்கின் புகாரில் குறிப்பிட்ட படி எதிரி ரூ.2,50,000/- கொடுக்க கடன்பட்டவர் இல்லை என்றாலும்,நான் இந்த புகாரில் நிறைய உண்மை சங்கதிகளை மறைத்து புகார் தாக்கல் செய்துள்ளதால் என் புகார் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் இல்லை, இதை இவர்கள் வேற மாதிரி திசை திருப்புவதற்காக எடுத்துச்செல்கிறார்கள்.

(Sd/-R.Senthilkumar)
DM-Cum-JM,
Thiruvennainallur